**Page No.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.286/**2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : தனலெட்சுமி
Father' s Name : பூமிநாதன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

27.07.2026 CC No.286/2022 அ.சா.2 தனலெட்சுமி

( 2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி இறந்துவிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

<u>**முதல் விசாரணை:**</u>

நான் அகரம்காலனி, திருப்புவனம் என்ற முகவரி எனது அப்பா ஊராகும். சம்பவ சமயத்தில் நான் அங்கு வசித்து வந்தேன். தற்போது எனக்கு திருமணமாகி தேனி ஆண்டிப்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 விக்னேஷ்வரன் எனது சித்தி மகன் ஆவார். அ.சா.1 ஆஜர் எதிரியுடன் சமாதானமான விவரம் எனக்கு தெரியும் நானும் அவருடன் சமாதானமாக செல்கிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.27 14:07:22 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக செல்வதாக சமாதான மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கடந்த 01.11.2019ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் என்னிடம் இந்த வழக்கு எதிரிகள் பாலியல் விருப்பத்தை தெரிவித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்றும் அதை நான் எனது அண்ணன் அ.சா.1விடம் கூறினேன் என்றும் அதை அ.சா.1 எதிரி கருப்பசாமியை கண்டித்தார் என்றும் அதை மனதில் வைத்து 02.11.2019ம் தேதியன்று காலை 11.30 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டின் முன்பு இருந்தபோது எதிரிகள் அ.சா.1யைப் பார்த்து அசிங்கமாக பேசி அ.சா.1யைக் கீழே தள்ளிவிட்டு கையால் அடித்தும் காலால் மிதித்தும் அ.சா.1யைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் நான் எனது போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.27 14:07:29 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.